# பொருளடக்கம்


1 தலைவர் உரை
2 நிறைவேறிய நிகழ்ச்சிகள்
- ❖ தைப்பூச விருந்து
- ❖ உள்ளூர் சுற்றுலா
- ❖ கிரிக்கெட் போட்டி

3 நடைபெறவிருக்கும் நிகழ்ச்சிகள்
- ❖ ஆச்சிமார்கள் உபயம்
- ❖ இறகுப் பந்து போட்டி
- ❖ கலை நிகழ்ச்சி
- ❖ 2008 முகவரிக் கையேடு (இணைப்பு)

4 கோவில் செய்திகள் (இணைப்பு)
5 நகரத்தார் பக்கம்
- ❖ சிந்தனைத் துளிகள்
- ❖ அறிவோமா ஆன்மீகம்
- ❖ நல வாழ்வு - ஆரோக்கியப் பக்கம்
- ❖ கவிதை

6 மகளிர் பக்கம்
- ❖ வீட்டுக் குறிப்புகள்
- ❖ சமையல் பக்கம்
    - i. சமையல் டிப்ஸ்
    - ii. சமையல் குறிப்பு
- ❖ கோலம்

7 சிறுவர் பக்கம்
- ❖ புதிர்
- ❖ கதை

8 இதர செய்திகள்



**15A, தேங்க் ரோடு**
**சிங்கப்பூர் 238065**
**தொலைபேசி எண்:6737 9393**

http://www.sttemple.com
http://www.singainagarathar.com

# 1. தலைவர் உரை

பேரன்புடைய நகரத்தார் பெருமக்கள் அனைவருக்கும் எங்கள் செயற்குழுவினரின் இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்.

மீண்டும் இரண்டு திங்களுக்குப் பிறகு இயற்கை மணத்துடன் கண்ணைக் கவரும் வண்ணக் கலவையாக புதுப் பொலிவுடன் இரண்டாவது மலர்க் கொத்துடன் உங்களைக் காண்பதில் பெருமிதம் கொள்கின்றேன்.

பலரின் பாராட்டுடன் கடற்கரைபட்டின பூங்காவில் இனிய உல்லாசப் பயணம், பின்னர் குவீன்ஸ்டவுனில் விறுவிறுப்பாக நடந்தேறிய கிரிக்கெட் போட்டியும் இனிதே முடிந்தன. நடந்து முடிந்த இரு நிகழ்ச்சிகளுக்கும், சுற்றம் சூழ வந்தவர்களுக்கும், வர இயலாமல் வாழ்த்துத் தெரிவித்தவர்களுக்கும், மனமுவந்து எண்ணிக் கொடுத்த வெள்ளிக்காசு, பரிசுப் பொருட்கள் வாரி வழங்கிய வள்ளல் பெருமக்களுக்கும் எங்கள் இதயங்கனிந்த நன்றி வாழ்க வளமுடன் பல்லாண்டு.

இது வரை சிறப்பாகத் திட்டமிட்டு நிகழ்ச்சிகளை நடத்தித் தந்த பெருமிதத்துடன், எங்கள் செயற்குழு உறுப்பினர்கள் தம் குடும்பத்துடன் இணைந்து மேலும் பல நிகழ்ச்சிகளை நடத்த கடப்பாடு கொண்டிருக்கின்றார்கள்.

அடுத்த இரண்டு மாதங்களில் ஆச்சிமார்கள் உபயம், ஆண்டு கலை விழா, புதிய தகவல் கையேடு வெளியீடு, பூப்பந்து போட்டி மற்றும் அந்நாளில் நம்மவர்கள் சீருடனும் சிறப்புடனும் வாழ்ந்து சரித்திரம் படைத்த பர்மா அல்லது செய்கோனுக்கு சுற்றுப் பயணம் ஆகிய நிகழ்ச்சிகளை நடத்த திட்டமிட்டுள்ளோம். அனைத்து நிகழ்வுகளும் உங்கள் பேராதரவுடன் சிறப்பெய்தும் என்பது எங்களது அசைக்க முடியாத எண்ணம்.

கடற்கரை பட்டினத்தில் அன்று கண்ட கப்பல் நமது நகரத்தார்களின் வேதவாக்கான "திரைக் கடல் ஓடியும் திரவியம் தேடு" என்ற அவ்வை மொழியை நினைவூட்டியது. அன்றும், இன்றும் உலகின் மூலை முடுக்குக்கெல்லாம் நம்மவர்கள் சென்று செல்வம் ஈட்டி பலருக்கு வழிகாட்டியாக இருந்திருக்கிறார்கள். செல்வம் திரட்ட நல்வழிகள் என்ன என்பதை நம் சிங்கை நகரத்தார் மலரில் காண்க.

பணத்தால் வீட்டை வாங்கலாம், இல்லத்தை வாங்க முடியாது
பணத்தால் படுக்கையை வாங்கலாம், தூக்கத்தை வாங்க முடியாது
பணத்தால் புத்தகத்தை வாங்கலாம், அறிவை வாங்க முடியாது
பணத்தால் மருத்துவத்தை வாங்கலாம், உடல் நலத்தை வாங்க முடியாது
என்கிறது ஒரு சீனப்பழமொழி.

அது போல செல்வத்தால் வாங்க முடியாத பேரின்பங்களான நல்லதொரு மனைவியுடன் ஆனந்தமான குடும்பம், நல்ல கல்வி அறிவு, பிறர் மதிக்க வாழ்தல், பேரின்பம் காண நாம் மனித நேயம் மிகுந்த நற்பண்புகளுடன், தெய்வ வழிபாடு செய்து அறநெறிகளுக்கு ஏற்ப வாழக் கற்றுக் கொள்வோம்.

கற்பக விநாயகன் பொற்பாதம் வணங்கி, சிங்கை சிங்காரவேலன் அருளால் நாம் எல்லோரும் நலம் பல பெற்று மகிழ்ச்சியுடன் பல்லாண்டு வாழ திரியம்பகனை வேண்டிக் கொள்கின்றேன்.

அடுத்தடுத்து புதிய மலர்க்கொத்துகளுடன் உங்களைச் சந்திக்கக் காத்திருக்கிறேன்.

**அரு. அருணாசலம்**
**தலைவர்**

# 2. நிறைவேறிய நிகழ்ச்சிகள்

## (அ) தைப்பூச விருந்து

2008 ஆம் ஆண்டு தைப்பூசம் சிறப்பாக நடத்த உதவிய நம் நகரத்தார் பெருமக்களையும், மற்ற தொண்டூழியர்களையும் கௌரவிக்கும் வகையில் அருள்மிகு தெண்டாயுதபாணி திருக்கோவிலில் மார்ச் 2-ஆம் தேதி 2008, ஞாயிற்றுக் கிழமை இரவு 7 மணி அளவில் தைப்பூச விருந்து சிறப்பாக நடைபெற்றது.

## (ஆ) உள்ளூர் சுற்றுலா

இவ்வருடம் மார்ச் 9-ஆம் தேதியன்று இன்பச் சுற்றுலாவிற்கு நகரத்தார் சங்கம் ஏற்பாடு செய்தது. இடத்தை தேர்வு செய்யும் போது நகர வட்டாரத்தை ஒட்டிய இடமாகவும், புதிய இடமாகவும் இருக்க விரும்பிய சங்கம், லெபரடார் பூங்காவினைத் தேர்வு செய்தது. அதன்

காரணமாக நகரத்தார் பெருமக்கள் 380 பேருக்கும் மேலாகக் கலந்து கொண்டு இன்பச் சுற்றுலாவை சிறப்பித்தனர்.

சுற்றுலா தினத்தன்று காலை வானம் தெளிவாகவும் காணப்பட்டதால் உற்சாகமாகத் துவங்கியது. காலை 8.30 மணி அளவிலிருந்தே நகரத்தார் பெருமக்கள் குழுமத் துவங்கினர். சுமார் 9.30 மணி முதல் மதிய உணவு வேளை வரை வடை மற்றும் தேநீர் / காப்பி தர ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வந்திருந்த உறுப்பினர்கள் ஒருவருடன் ஒருவர் அளவளாவிக் கொண்டிருந்த வேளையில் சுமார் 9.45 மணி முதல் சிறுவர்களுக்கான போட்டிகள் துவங்கின.

முதலில் நர்சரி மற்றும் பாலர் பள்ளி சிறுவர்களுக்கான விளையாட்டுகள் துவங்கின. குழந்தைகள் ஆரவாரமிட்டு உற்சாகமாகக் கலந்து கொண்டதைப் பார்க்கும் போது அனைவரின் உள்ளமும் மகிழ்ச்சிக் கடலில் மிதந்தது. அதனை அடுத்து ஒவ்வொரு போட்டியாக உயர்நிலைப்பள்ளி முதல் இளநிலைக்கல்லூரி மாணவர்கள் வரை அனைவருக்கும் போட்டிகள் நடத்தப் பட்டன. எல்லோரும் உற்சாகமாகக் கலந்து கொண்டு பல பரிசுகளை வென்றனர்.

பிறகு மதிய உணவு வேளை வந்தது. சிறிது நேரம் மழை தன் பங்கு மகிழ்ச்சியை, தூறலாக வெளிப் படுத்தியது. பெரிய அளவில் கூடாரம் ஏற்பாடு செய்யப் பட்டிருந்ததால் அனைவரும் தங்கும் விதமாக அமைந்தது. மதிய உணவு அனைவரும் பாராட்டும் வகையில் சிறப்பாக அமைந்தது.

இந்நேரத்தில் விளையாட்டு ஒருங்கிணைப்பாளர்கள் இளம் ஜோடிகளுக்கான போட்டி ஒன்றை நடத்தத் திட்டமிட்டு, அதை செயல்படுத்தினார்கள். இப்போட்டி, அனைவரையும் கவர்ந்தது. ஆச்சிமார்கள், அண்ணன்மார்களின் தலைமுடியை கையாண்டவிதம், அனைவரையும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்ய வைத்தது. அதனை தொடர்ந்து உள்ளரங்க விளையாட்டுகளான அதிர்ஷ்டக் குலுக்கல், இளையர் மற்றும் பெரியவர்களுக்கான போட்டிகள், திரைப்பட பெயர் கணிப்பு போட்டி என பல சுவாரசியமான போட்டிகள் நடத்தப்பட்டன. அனைவரின் முகத்திலும் மகிழ்ச்சியைக் கண்கூடாக காண முடிந்தது. இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக ஆடவர்களுக்கான கயிறு இழுக்கும் போட்டி அமைந்தது.

இதனிடையில் மாலை வேளை இடைப்பலகாரம், தேநீர், காப்பி, மைலோ அளிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து, போட்டியில் கலந்துக் கொண்டு, வென்றவர்கள் பரிசுகளை வாங்கிய வண்ணம் இருந்தனர். நிகழ்ச்சி மாலை 6.20 மணியளவில் ஒரு நிறைவுக்கு வந்தது. சுற்றுலாவில் கலந்துக்கொண்ட உறுப்பினர்களை, தெண்டாயுதபாணி கோவிலில் கொண்டுவிட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பிறகு ஏற்பாட்டாளர் குழு மற்றும் சில உறுப்பினர்கள் உதவியுடன், சுற்றுலா நடந்த இடத்தை சுத்தம் செய்து முடித்தனர்.

இத் தருணத்தில், நகரத்தார் சங்க மேலாண்மை குழு, சுற்றுலாவில் கலந்துக் கொண்ட அனைவருக்கும் தனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது. மேலும் இந்த சுற்றுலா உண்மையிலேயே இன்ப சுற்றுலாவாக அமைய உதவிய ஒருங்கிணைப்பாளர்களுக்கும், பல பரிசுகள் அன்பளிப்பாக அளித்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் எங்கள் நன்றி. ...........வணக்கம்

**(இ)** கிரிக்கெட் போட்டி: முழு விவரங்களுடன் அடுத்த மலரில் வெளியாகும். படங்கள் மட்டும் இந்த இதழில் இடம் பெற்றுள்ளது.

# 3. நடைபெறவிருக்கும் நிகழ்ச்சிகள்

## (அ) ஆச்சிமார்கள் உபயம் (மே 01, 2008 - வியாழக்கிழமை)

ஆண்டு தோறும் சிறப்பாக நடைபெற்று வரும் ஆச்சிமார்கள் உபயம் இவ்வாண்டு 01-05-2008 வியாழக்கிழமை நடைபெறும். இந்த ஆண்டு சிறப்பு நிகழ்ச்சியாக, வெள்ளி இரதத்தில் முருகன் புறப்பாடு நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். மாலை 7.00 மணிக்கு நடைபெறுகிற தீபாராதனை நிகழ்ச்சியுடன் தொடங்குகிற ஆச்சிமார்கள் உபயம், சுவாமி புறப்பாடு வைபவத்திற்குப் பிறகு இரவு உணவுடன் நிறைவடையும். சிறப்பான ஏற்பாடுகளுடன் நடைபெறுகிற இந்த ஆச்சிமார்கள் உபயத்தில் அனைவரும் குடும்பத்துடன் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம்.

## (ஆ) இறகுப்பந்து விளையாட்டுப் போட்டி (மே 25, 2008 - ஞாயிற்றுக்கிழமை)

இந்த ஆண்டு, சிங்கை நகரத்தார் சங்கம் சார்பாக நடத்தும் நிகழ்ச்சிகளில் ஒன்றான இறகுப்பந்து போட்டி, வருகிற மே 25ம் தேதி

(ஞாயிற்றுக்கிழமை) நடைபெறவிருக்கின்றது. (இடம், தோபாயோ CC, சென்ற ஆண்டு நடந்த அதே இடத்தில்). சற்றே மாறுபட்டு இவ்வாண்டு, இருவருக்கான, மற்றும் மகளிருக்கான போட்டிகள் தனியே நடை பெற உள்ளது.
கீழே குறிப்பிட்டவாறு மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

- ❖ சிறியவர் (19 வயதிற்கு உட்பட்டவர்கள் - இரட்டையர்)
- ❖ பெண்கள் (இரட்டையர்)
- ❖ பொதுப்பிரிவு (இரட்டையர்)

போட்டிகளுக்கான பதிவு செய்ய விரும்பும் நகரத்தார்கள், கீழ் குறிப்பிட்டவர்களிடம் 16-05-2008 (வெள்ளிக்கிழமை) முன்னதாக பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. கண. மாணிக்கம் - 96382656
2. இராம. மெய்யப்பன் - 96402400
3. வயி. வயிரவன் - 82283680
4. கண. முத்துகணபதி - 92315576
5. அருண் முத்தையா - 91830645

**பதிவுக் கட்டணம்** ஒரு நபருக்கு வெள்ளி **10/- மட்டுமே**.
**நேரம்** - இறகு பந்து போட்டிகள் **சரியாக காலை 7.30 மணிக்கு துவங்கும்.**

## (இ) கலை நிகழ்ச்சி (ஜூன் 15, 2008 - ஞாயிற்றுக்கிழமை)

ஆண்டு தோறும், நாம் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கலந்து கொள்ளும், கலை நிகழ்ச்சி எதிர்வரும் 15.06.2008 ஞாயிற்றுக்கிழமை மதியம் 4.00 மணி முதல் இரவு 8.30 மணி வரை நம் கோவிலின் செட்டியார் திருமண மண்டபத்தில் சிறப்பாக நடை பெற உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். கலை நிகழ்ச்சியில் கலந்து கொள்ள விரும்புவர்கள், தங்களின் பெயர்களையும் நிகழ்ச்சியின் விவரங்களையும், கீழ்க்குறிப்பிட்டிருக்கும் நபர்களிடம் 01.06.2008 க்குள் பதிவு செய்ய வேண்டுகிறோம்.

<u>தொலைபேசி வழி பதிவு செய்வோர்</u> :
திருமதி அலமு சுப்ரமணியன் - 97897305
திருமதி அலமு வீரப்பன் - 65666830
திருமதி உமா லெட்சுமணன் - 64250143

<u>மின்னஞ்சல் வழி பதிவு செய்வோர்</u> :

Renganathan - renga14@gmail.com

<u>நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்ள விதிமுறைகள்:</u>

- ஒரு குழந்தை / நபர் ஒரு நிகழ்ச்சியில் மட்டுமே பங்கேற்கலாம், (நோக்கம் - அனைவருக்கும் வாய்ப்பு கிட்ட வேண்டும்)
- ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் மூன்று நிமிடம் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது, (நோக்கம் - அதிக நிகழ்ச்சிகள் நடத்தி, அதிக நபர்கள் கலந்து கொண்டு, நிகழ்ச்சி குறிப்பிட்ட நேரத்தில் முடிவுறவேண்டும்)
- பாட்டு இசை ஆகியவற்றை இசை வட்டுக்களில் (CD) மட்டுமே கொடுக்க வேண்டுகிறோம் (நோக்கம் - நேரம் வீணாகாது தொடர்ந்து நடத்த வேண்டும்)
- நிகழ்ச்சிகளை ஏற்பாட்டாளர்கள் வரிசைப் படுத்தி நடத்துவதால், வரிசையை மாற்ற இயலாது. (நோக்கம் - நேரம் வீணாகாது தொடர்ந்து நடத்த வேண்டும்)
- நிகழ்ச்சி தொடங்கும் முன்னரே, பங்கேற்பவர்கள் மேடைக்கு அருகே அமைதியாகக் காத்திருக்கவேண்டும் (நோக்கம் - நேரம் வீணாகாமலும், பார்ப்பவர்களுக்கு இடைஞ்சலிலாமலும் இருக்க வேண்டும்.)

பார்ப்பவர்கள் பார்த்து பாராட்ட முடியாவிட்டால் நீங்கள் கலந்து கொள்வது யாருக்காக? அதனால் மேற்கூறிய விதிமுறைகளின் நோக்கத்தைக் கருத்தில் கொண்டு, முறையாகக் கடைப்பிடித்து, ஏற்பாட்டாளர்களுடன் ஒத்துழைத்து நிகழ்ச்சி சிறப்புற நடைபெற உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

## (ஈ) 2008 முகவரிக் கையேடு வெளியீடு (ஜூன் 15, 2008)

புதிய முகவரிக் கையேடு வெளிவர இருப்பது உங்கள் அனைவருக்கும் தெரிந்ததே. கலை நிகழ்ச்சியில், 15.06.2008 அன்று முகவரி கையேட்டினை வெளியிட திட்டமிட்டுள்ளோம். இது நிறைவேறுவது உங்கள் ஒத்துழைப்பிலும், ஆதரவிலும்தான் உள்ளது.

**நீங்கள் எப்படி ஒத்துழைக்கலாம்** - உங்களது முகவரியை சரி பார்த்திருந்தால், மிக்க நன்றி. அப்படி சரி பார்க்கவில்லை என்றால், உடனடியாக, கீழே குறிப்பிட்டுள்ளவர்களில் ஒருவரிடம் தொடர்புக்

கொண்டு உங்களது முழு விவரங்களை சரி பார்த்துக்கொள்ளுமாறுக் கேட்டுக்கொள்கிறோம்.

**மேலும், திருத்தப் பட்ட பதிப்பின் ஒரு மாதிரி வடிவம் ஏப்ரல் 25, 2008 வெள்ளி இரவு முதல், மே 1, 2008 வியாழன் இரவு வரை அருள்மிகு தெண்டாயுதபாணி ஆலய அலுவலகத்தில் வைக்கப்பட இருக்கிறது. அதனை வந்து சரி பார்த்து உங்களது விவரங்களுக்குக் கீழ் கையெழுத்திட்டு உறுதி செய்ய வேண்டுகிறோம்.**

2008 முகவரி கையேட்டில் விளம்பரம் செய்ய / நன்கொடை வழங்க விரும்பும் அன்பர்கள், உடனடியாக அரு.அருணாசலம் (தொ.பே.எண் - 97882275) சுப.அருண் (தொ.பே.எண்-90068415) அல்லது ம.தேனப்பன் (தொ.பே.எண்-81133219) தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

2008 முகவரி கையேட்டினை முன் பதிவு மூலம் விற்பனை செய்யலாம் என முடிவு செய்துள்ளோம். முன் பதிவு செய்பவர்களுக்கு, பதிவு செய்த எண்ணிக்கையில் சலுகை விலையில் கையேடு வழங்கப்படும். பதிவு செய்ய இந்த மலருடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தைத் பூர்த்தி செய்து அதற்கு உரிய தொகையுடன் அதில் குறிப்பிட்டுள்ள நபரிடம் கொடுத்து ரசீது பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இது சம்பந்தமாக, மேல் விவரம் அறிய விரும்பும் உறுப்பினர்கள், அருண் (தொ.பே.எண்-90068415) உடன் தொடர்பு கொண்டு அறிந்துக் கொள்ளலாம்.

# 4. கோவில் செய்திகள்

- **கோவில் நிகழ்ச்சிகள்** : இந்த ஆண்டுக்கான கோவில் நிகழ்ச்சிகளின் அட்டவணை, இந்த மலருடன் இணைக்கப்பட்டுள்ளது. இது உங்களுக்கு மிகவும் உபயோகமாக இருக்கும் என நம்புகிறோம்.

**உடற்பயிற்சி** : பிரதி மாதம், முதல் ஞாயிற்றுக்கிழமை அன்று, காலை மணி 7.15க்கு தொடங்கி, 8.45 மணி வரை, நம் தெண்டாயுதபாணி கோவிலின் வெளிப்பிரகாரத்திலும், செட்டியார் திருமண மண்டபத்திலும் உடற்பயிற்சி பயிற்றுவிக்கப்படுகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

**முதலில்,** காற்றோட்டமான, பசுமை மிகுந்த மற்றும் ஆற்றங்கரை வழியான பாதையில் நான்கு கிலோமீட்டர் **மெது நடை ஓட்டம்.**

**இதனை தொடர்ந்து - உடற்பயிற்சி**.. சிங்கப்பூரின், புகழ் பெற்ற உடற்பயிற்சி பயிற்றுவிப்பாளரான, கீழப்பூங்குடி திரு ராமசாமி அவர்களால், அனைவருக்கும் உடற்பயிற்சி முறையாகப் பயிற்றுவிக்கப்படுகிறது. மக்களின் உடல் நலனைக் கருத்தில் கொண்டு கடந்த இருபது மாதங்களாக தொடர்ந்து இச்சேவையை, அருள்மிகு தெண்டாயுதபாணி கோவில் நிர்வாகம் நடத்தி வருகிறது. ஆர்வம் உள்ள அனைவரும் இதில் கலந்து கொண்டு ஆரோக்கியமான வாழ்க்கை முறையை கடைப்பிடிக்க வேண்டுகிறோம்.

# 5. நகரத்தார் பக்கம்

## (அ) சிந்தனைத் துளிகள்

### சிறந்தது எது ?

| | |
|---|---|
| மௌனமே | சிறந்த பதில் |
| மன்னித்தலே | சிறந்த தண்டனை |
| மறந்துவிடுதலே | சிறந்த நினைவு |
| மன சுத்தமே | சிறந்த ஒழுக்கம் |
| மறைக்காது பேசுவதே | சிறந்த உண்மை |
| மனம் விட்டு அழுவதே | சிறந்த ஆறுதல் |
| மழலையின் சிரிப்பே | சிறந்த ஓவியம் |
| மனித நேயமே | சிறந்த மதம் |
| மனைவியை நேசிப்பதே | சிறந்த காதல் |

### சோதனை

சாதிக்கும் எண்ணமிருந்தால்
தோல்வி உன்னைச் சந்திக்காது
உழைக்கும் எண்ணமிருந்தால்
உயர்வு உன்னை நிந்திக்காது
சுறுசுறுப்பு உனக்குள்ளிருந்தால்
சோம்பல் உன்னைச் சோதிக்காது
சுயநலமில்லா மனதிருந்தால்
உன்னில் எதுவும் பாதிக்காது

**சிந்தியுங்கள்**

சிந்திக்காமல்
படிப்பது வீண்,
படிக்காமல்
சிந்திப்பது ஆபத்தானது.

**....முடிவு**

ஆயிரம் முறை சிந்தனை செய்யலாம்
ஆனால் ஒரு முறைதான் முடிவு எடுக்க வேண்டும்
- துருக்கியப் பழமொழி

## (ஆ) அறிவோமா ஆன்மீகம்

### ❖ கோயில்களில் தேங்காய் உடைப்பதன் பொருள்

தேங்காய் உடைப்பதில் ஒரு பெரிய உண்மை மறைந்து இருக்கிறது

தேங்காயின் மேல் கடினமான ஓடும், அதனுள்ளே மென்மையான பருப்பாகிய காய்ப்பகுதியும், அதனுள்ளே இனிய இளநீரும் இருக்கின்றன. உருண்டையான புற ஓடு பிரபஞ்சத்தை ஒத்திருக்கிறது. இரண்டும் கோள வடிவம் உடையன. அது உலக மாயையைக் குறிப்பது. உள்ளிருக்கும் வெண்ணிறப்பகுதி பரமாத்மாவையும், இளநீர் பரமானந்த அமிர்தத்தையும் குறிக்கிறது. உள்ளிருக்கும் ஜீவாத்மா மாயையினால் பரமாத்மாவை உணராமல் அதன் அருளையும் பெறாமல் நிற்கிறது. அதுபோல வெள்ளை பகுதியையும் இளநீரையும் காண முடியாமல் ஓடு மறைக்கிறது. ஈஸ்வர சந்நிதியில் மாலையை அகற்றி ஒளிரும் உருவத்தைக் காட்டி இறையருளை நுகரச் செய்யும் செயலையே இது காட்டுகிறது. இவ்வளவு உட்கருத்துகளையும் உடையதாக இருப்பதனால் தேங்காயை ஆலய வழிபாட்டில் மிகவும் முக்கியமானதாக வைத்திருக்கிறார்கள்.

- புத்தகத் தொகுப்பு

### ❖ பூஜை வேளையில் திரை மறைப்பது ஏன்?

அன்னமயம், பிரணமயம், மனோமயம், விஞ்ஞான மயம், ஆனந்த மயம் என்ற 5 கோசங்கள் கோவில்களில் உள்ள 5 பிரகாரங்களைக் குறிக்கின்றன. ஞானத்தை அஞ்ஞானம் மறைக்கிறது என்பதை உணர்த்தவும், உள்ளத்தில் உறையும் இறைவனை மாயையாகிய மயக்கம் மறைக்கிறது என்பதை உணர்த்தவே பூஜை வேளையின் போது திரையிட்டு மறைக்கிறார்கள்.

- புத்தகத் தொகுப்பு

## ❖ விபூதியின் மகிமை

உடலில் விபூதி பூசினால் சில பிணிகள் தவிர்க்கப் படுகின்றன. உடம்பில் பரவியுள்ள சில வகை விஷக் கிருமிகள், விபூதிப் பூச்சினால் உறிஞ்சப் படுகின்றன. தோட்டத்தில் உள்ள அவரைச் செடியில் நோய் கண்டால் அடுப்புச் சாம்பலைப் போடுகிறோம். அடுப்புச் சாம்பலுக்கே அந்த சக்தி இருக்குமானால், விபூதிக்கு எவ்வளவு சக்தி இருக்கும் என்பதை யூகித்துக் கொள்ளுங்கள்.

- புத்தகத் தொகுப்பு

## ❖ கோலம் போடுவது எதற்காக?

வீட்டு முன்பு கோலம் போடுகிறார்கள். ஏன்? கோலத்தின் நடுப்புள்ளி சிவனைக் குறிக்கும். சுற்றுக் கோடுகள் சக்தியைக் குறிக்கும். முதுகு வளைந்து கொடுத்தால் தான் கோலம் போட முடியும். வளைந்து குனியும் போது அகம்பாவம் அகல்கிறது. அகம்பாவம் இல்லாமல் குனிந்து வளைந்து சென்றால் தான் சிவனை அடையமுடியும் என்பதே கோலத்தின் தத்துவம் ஆகும்.

- புத்தகத் தொகுப்பு

## ❖ எது முறை?

ஆலயத்தில் கொடிக்கம்பத்தின் (துவஜஸ்தம்பத்தின்) முன்புதான் விழுந்து வணங்க வேண்டும். ஆலயத்தின் உள்ளே எந்த சந்நிதிகளிலும் விழுந்து வணங்கக் கூடாது. கிழக்கு, மேற்கு நோக்கிய சந்நிதிகளில் வடக்கே தலை வைத்தும், தெற்கு, வடக்கு நோக்கிய சந்நிதிகளில் கிழக்கே தலை வைத்தும் வணங்க வேண்டும். கால் நீட்டும் பின்புறத்தில் எந்த சந்நிதியும் இருத்தல் கூடாது. கொடி மரத்தின் முன்னால் விழுந்து வணங்கினால் அங்கு எந்த சந்நிதியும் இருக்காது. எனவேதான் இங்கு மட்டும் விழுந்து வணங்க வேண்டும் என்று நம் முன்னோர் வகுத்துள்ளனர்.

- புத்தகத் தொகுப்பு

# (இ) நல வாழ்வு - ஆரோக்கிய பக்கம்

## ❖ உப்பு பற்றிய சில துப்புகள்

o இரத்த அழுத்தத்திற்கும், உப்புக்கும் தொடர்புண்டு. உப்பு மிகுந்தால் அழுத்தமும் அதிகரிக்கும், உப்பு குறைந்தால் அழுத்தமும் குறையும்.

o பருவ வயதில் உள்ளவர்களின் முகத்தில் பருக்கள் வராமலிருக்க உப்பைக் குறைவாகப் பயன்படுத்துவது தான் உகந்த வழி.

o 40 வயதானவுடன் எல்லோருக்கும் தோலில் சுருக்கம் விழுகிறதல்லவா, இதற்கு முக்கிய காரணம் அதிகமாக உப்பினை உணவில் சேர்ப்பதுதான். உப்பைக் குறையுங்கள், சுருக்கம் குறையும்.

o சிலருக்கு 30 வயதைத் தாண்டியவுடன் கண்களுக்கு கீழே, கருவளையம் விழுகிறதல்லவா, இதற்கும் உப்பு அதிகம் உடம்பில் சேருவதே காரணம், குறையுங்கள்.

o நீண்ட கால நோயாளிகள் உணவில் உப்பின் அளவு பாதியாக இருக்க வேண்டும்.

o காமாலை நோயுடையவர்கள் நோய் தீரும்வரை உப்பு சேர்த்தல் கூடாது.

o சிறுநீரில் உப்பிருந்தால் உப்பு குறைவாகவே வாழ்நாள் முழுவதும் பயன்படுத்தவேண்டும்.

- புத்தகத் தொகுப்பு

## புத்துணர்ச்சிக்கு - வாழைப்பழம்

வேலைப்பளு, மனஉளைச்சல் போன்றவற்றால் சிலர் எளிதில் சோர்வடைந்து விடுவார்கள். இவர்களுக்கு வாழைப்பழம் சாப்பிடுவதன் மூலம் புத்துணர்ச்சி கிடைக்கிறது.

சாதாரணமாகச் செயல்படுபவர்கள் வாழைப்பழம் சாப்பிட்டதும் துடிப்பாக இருப்பதாக உணர்கிறார்கள். வாழைப்பழத்தில் உள்ள சத்துக்கள் டிரைப்டோன் என்ற ஒருவித புரதப் பொருளை உடனே சுரக்க வைத்து விடுவதால் புத்துணர்ச்சியுடன் காணப்படுகிறார்கள் என்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாம்.

- புத்தகத் தொகுப்பு

## தேன் விலைமதிக்க முடியாத உணவுப் பொருள்

1. தேன் சாப்பிட்டு வரும் பிள்ளைக்கு பல் சொத்தை விழாது.
2. கண்வலி, எரிச்சல், பீளை கட்டுவதற்கு சுத்தமான தேனை மையிடுவது போல் கண்ணில் போட்டால் கண் நோய் வராமல் காப்பாற்றும்.
3. குடல் நோயால் அவதிப்படுபவர்கள், உடல் இளைத்து வருபவர்கள் காலை, மாலை, பகலில், பாலில் இரண்டு அவுன்ஸ் தேனை கலந்து சாப்பிட்டு வந்தால் நரம்புகள் பலப்பட்டு உடல் தேறி ஆரோக்யம் அடைவார்கள்.

4. தேனை பல மாதங்கள் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் ஞான தாதுக்களின் சக்தி பலப்பட்டு மூளை பலம் பெரும். அறிவு விசாலமாகும். அதனால் இருதயமும் பலப்படும்.
5. தூக்கம் வராமல் துன்பப்படுபவர்கள் ஒரு அவுன்ஸ் தேனை பசும்பாலில் கலந்து சாப்பிட்டால் இன்பமாக நித்திரை செய்வார்கள்.
6. தொண்டையில் வலி, ஜலதோஷம் முதலியவற்றிற்கு ஒரு நாளைக்கு 6 தடவை தேனை தொண்டைக்குழியில் தடவினால் நோய் ஓடி விடும்.
7. ஆண், பெண் இருவரில் யார் பலவீனமாக இருப்பதாக உணர்ந்தாலும் அவர்கள் மட்டும் இளஞ்சூடான பாலில் ஒரு அவுன்ஸ் தேனை கலந்து சாப்பிட்டு வர நிவர்த்தி கிட்டும்.
8. பித்தம் அதிகமாகி அவதிப் படுவோர் இஞ்சியை நன்றாக கழுவி மேல்தோல் நீக்கி சிறு துண்டுகளாக்கி தேனில் ஊற வைத்து அதிகாலையில் சில துண்டுகள் சாப்பிட்டு வந்தால் எத்தகைய பித்தமும் சமனமாகும்.
9. தேகத்தில் ஏற்படும் காயங்களுக்கு ரணசுத்தி பொருளான தேனை தடவிவர புண்ணும் ஆறும். காயத் தழும்பும் இருக்காது. தீ சுட்ட புண்ணுக்கு தேன் நல்ல மருந்து.
10. வயிறு சம்பந்தமான தொல்லைகள் அனைத்துக்கும் அருமையான மருந்து. சுத்தமான தேன் வாந்தியை நிறுத்தும்.
11. சுடுநீரில் தேனை கலந்து சாப்பிட மலம் இளகும்.
12. தேனை சிறிது சிறிதாக நாவில் தொட்டு சாப்பிட பேதி குறையும்.
13. அடிபட்ட வலிக்கும், சுளுக்கு, முடக்குகளுக்கும் தேனைத் தடவ வலி குறைந்து நோய் குணமாகும்.
14. தொடர்ந்து தேனைத் தண்ணீரில் கலந்து குடித்து வர உடல் எடை குறையும்.
15. தேன் குடும்ப வாழ்க்கைக்கு மிகவும் துணைபுரியும். கர்ப்பத்தை உண்டாக்க உதவும்.

தேன் உலக நாடுகள் அனைத்தும் ஏற்றுக் கொண்ட சிறந்த உணவு.

- புத்தகத் தொகுப்பு

## மளிகைப் பொருள் மகத்துவம்

சாதாரணமாக நமது வீட்டுக்கு அருகில் இருக்கும் மளிகைக்கடையில் கிடைக்கும் பொருட்களில் கூட ஏகப்பட்ட பலன்கள் உண்டு. நமது

முன்னோர்களின் மருத்துவ பாலமாக விளங்கிய சில பொருட்களின் மகத்துவத்தை அறிவோம்.

**நற்சீரகம்** : வாந்தியுடன் கூடிய வயிற்றுவலி, வாய்வு சம்பந்தமான வியாதிகள், இரைப்புடன் கூடிய இருமல், நெஞ்சுச்சளி, கல்லடைப்பு, நீர்த்துவார எரிச்சல், மூல நோய்கள், மலத்துடன் ரத்தம் வருதல், மூக்கடைப்பு, பசியின்மை, வாய்வு, வாத வலிகள் ஆகிய கோளாறுகளுக்கு நற்சீரகத்தை உணவுடன் சாப்பிட்டால் குணமாகும்.

**பெருஞ்சீரகம்** : அஜீரணம், மந்தம், வயிற்றுவலி, வயிறு உப்பிசம், வாதம், இருமல், நுரையுடன் கூடிய சளிவருதல், தொடர் தும்மல் போன்ற நோய்கள் பெருஞ்சீரகத்தால் குணமாகும்.

**கருஞ்சீரகம்** : கருஞ்சீரகம் பார்ப்பதற்கு சீரகம் போல இல்லாமல் கருப்பாக இருக்கும். இது கரப்பான், புண், மண்டைக் கரப்பான், தலைநீர் ஏற்றம், கபால நீர், ஒற்றைத் தலைவலி, சளியுடன் கூடிய இருமல், தும்மல், காய்ச்சல், கண் வலி ஆகிய நோய்களை கட்டுப்படுத்தும்.

**கொத்தமல்லி** : தாது பலமின்மை, குளிர் சுரம், உடல் சூடு, அதிகமான பித்தம், மன அழுத்தம், விக்கல், அதிகமான தாகம், அஜீரணம், வாந்தி, பொருமல், ஏப்பம், பசியின்மை, வாதம், வாய்வு வெளியேறாமை, குடைச்சல், மூட்டுகளில் வலி, வாத சுரம் போன்ற நோய்களுக்கு கொத்தமல்லியை உட்கொண்டால் குணமாகும்.

**வெந்தயம்** : நிரந்தரமாக தாது விருத்தியை உற்பத்தியாக்கும் சிறந்த மருந்து வெந்தயம். அதேபோல், அஜீரணம், அஸ்திசுரம், மேகப்புண், ரத்தபேதி, ரத்த பித்த வாந்தி, உடல் சூடு, சளியுடன் கூடிய இருமல் போன்ற வியாதிகளை நீக்கி, ரத்த விருத்தி ஏற்படுத்தி, சுக்கிலத்தைப் பெருக்கும்.

**ஓமம்**: இரைச்சலுடன் கூடிய பேதி, செரிமானமாகாமல் மந்தம், குளிர் காய்ச்சல், சளியுடன் கூடிய இருமல், அஜீரணம், வயிற்று பொருமல், குடல் எரிச்சல், ரத்த மூலம், உள் மூலம், ஆசனக் கடுப்பு போன்ற பல நோய்களைக் குணப்படுத்தக் கூடியது ஓமம்.

**மஞ்சள்:** வீக்கம், வண்டு கடி, மரு, முகப்பரு, கரும்புள்ளிகள், நாசி அடைப்பு, தலைவலி, ஜலதோசம், தும்மல், அம்மை நோய், பித்தம், மேக நோய்கள் போன்ற பிரச்சனைகள் குணப்படுத்தும் குணம் கொண்டது. பசியைத் தூண்டும். மஞ்சள் உடலுக்கு வனப்பும், அழகும் தரும்.

**கஸ்தூரி மஞ்சள்:** புண்கள், கரப்பான், கிருமியால் ஏற்படும் நோய்கள், குடல் மந்தம், சீரணமின்மை, உடல் சூடு போன்ற நோய்களை குணப்படுத்தி அறிவை விருத்தி செய்து ஆண்மைக்கு வலுவான உடலையும் விந்து விருத்தியையும் தரும்.

**இஞ்சி:** பித்த வாந்தி, குளிர் காய்ச்சல், வாதக்குடைச்சல், வாத வலி, எரிச்சல், அஜீரணம் போன்ற வியாதிகளை நீக்கும் திறன் கொண்டது இஞ்சி.

### (ஈ) பர்மா பயணம்

அன்புள்ள நகரத்தார் அனைவருக்கும் வணக்கம்

சென்ற மலரில் நான் எழுதியிருந்த பர்மா பயணக் கட்டுரையைப் படித்த அன்பர்கள் பலர் என்னிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டார்கள். அடுத்த கட்டுரையில் பர்மா சென்று வருவதற்கான விபரம் மற்றும் செலவு பற்றி அவசியம் எழுதுமாறு கேட்டுக் கொண்டார்கள்.

அதனை ஏற்று நான் விசாரித்து அறிந்து கொண்ட விவரத்தையும், ஒரு பயணத் திட்டத்தையும் வரைந்துள்ளேன். அதன் விவரம் பின் வருமாறு.

1. டிராவல் ஏஜண்ட் மூலமாக செல்வதே வசதியானது.
2. சிங்கப்பூர் குடிமக்கள், நிரந்தரவாசிகள், மற்றும் சிங்கப்பூர் வேலை அனுமதி வைத்திருப்பவர்கள் மட்டுமே சிங்கப்பூரில் உள்ள மியான்மர் (பர்மா) தூதரகத்தில் விசாவிற்கு விண்ணப்பிக்க முடியும்.
3. அனைத்து நாட்டு பாஸ்போர்ட்டுகளுக்கும் விசா தேவை.
4. இந்தியாவில் இருந்து சுற்றுலா வருபவர்கள் சிங்கப்பூரில் பர்மா விசாவிற்கு விண்ணப்பிக்க முடியாது. இந்தியாவிலேயே விசாவிற்கு விண்ணப்பித்து விசா பெற்றிருக்க வேண்டும்.
5. குழு சுற்றுலாவுக்கு பதிவு செய்த பிறகு விலகிக் கொள்வது இயலாததாகும் என்பதால் கட்டாயம் வரமுடியும் என்ற அன்பர்கள் தங்கள் பெயரை பதிவு செய்யலாம்.

6. புறப்படும் தேதியிலிருந்து ஆறு மாதம் வரை பாஸ்போர்ட் காலாவதியாகாமல் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டியது.

<u>பயணத்திட்டம்</u>

| | |
|---|---|
| பயணத்திட்ட நாள் | 4 நாள் 3 இரவு |
| உத்தேச தேதி | ஜூலை 4, 2008 முதல் ஜூலை 7, 2008 அல்லது ஜூலை 11, 2008 முதல் ஜூலை 14, 2008 வரை. |
| விமானம் | Silk Air அல்லது Myanmar Airlines |
| தங்கும் இடம் | 4 Star Hotel in Yangon |
| விமான கட்டணம் | S$450 ஒரு நபருக்கு (ஒரு அறையில் இருவர் தங்கும் முறையில்) |
| விமானதள வரி | S$120 ஒரு நபருக்கு |
| பர்மா (மியான்மர்) விசா | S$45 ஒரு நபருக்கு |
| ரங்கூன் சுற்றிவரும் வாகன செலவு | S$100 ஒரு நபருக்கு |
| காலை உணவு | தங்கும் ஓட்டலில் இலவசம் |
| மதியம் மற்றும் இரவு உணவு | அவரவர் செலவில். உத்தேசத் தொகை S$10-க்கு மிகாமல். வேளைக்கு / நபருக்கு |

டிராவல் ஏஜண்டிடம் விசாரித்த பொழுது மே மாத முதல் வாரத்தில்தான் முழுமையான தொகை விவரம் தெரிய வரும் என்று சொன்னார்கள். மேற்குறிப்பிட்ட உத்தேசச் செலவில் பர்மா (மியான்மர்) வர விருப்பம் உள்ள அன்பர்கள், 68581487 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு திருமதி ப்ரியா ரவியிடம் பெயர் கொடுக்கவும். பிறகு உங்களிடம் தொடர்பு கொண்டு மற்ற விவரங்களை பற்றி நான் பேசுகிறேன். பெயர் கொடுக்க கடைசி தேதி ஏப்ரல் 30, 2008. நன்றி.

- C.Y. ரவி (L082)

**(உ) கவிதை**

**<u>நகரத்தார் பெருமை</u>**

இப்புவியில் வங்கி முறைக்கு
வித்திட்ட ஆதிமூலம் நாங்கள்,

இருமனங்கள் இணைந்திடும் திருமணத்தை
திருவிழாவாய் நடத்தும் நற்சான்றோர்கள்,
இன் சொல்லுக்கும் விருந்தோம்பலுக்கும்
உலகின் நிரந்தர உதாரணங்கள்,
பணம் கோடியில் இருந்தாலும்
வாழ்வில் எளிமையின் இலக்கணங்கள்,
கல்விக்கும் இறைப்பணிக்கும்
வாரி வழங்கிடும் வள்ளல்கள்,
சொத்தோடு விலாசத்தையும் வழங்கி
சந்ததிகளைச் பெருமைபெறச் செய்பவர்கள்,
வாய்மையின் தலைமக்களாம் நகரத்தார்
பல்லாண்டு வாழிய வாழியவே!!!

- ம. தேனப்பன் (L213)

## சிங்கப்பூர் நகரத்தார் மாணவர் பெருமை

நம் சங்க உறுப்பினர் சுவாமினாதன் அண்ணாமலை (Y0240), உஷா சுவாமினாதன் தம்பதியரது புதல்வன், செல்வன் வீரப்பன், சமீபத்தில், அனைத்துலகப் போட்டியில், மோந்தியால்கோ பொறியியல் விருது வென்றார். இவரும், இவரது குழுவின் கண்டு பிடிப்பு, இந்திய விவசாயிகளுக்கு மிகவும் உதவிகரமாக இருக்கிறது என்ற செய்தி, சமீபத்தில் பல செய்தித்தாட்களில் வெளிவந்துள்ளது. இந்தியாவின் மகாராஷ்டிராவில் உள்ள ஒரு கிராமத்தை சேர்ந்த விவசாயிகள் சிங்கப்பூர் மாணவர்களின் புகழைப் பாடுகிறார்களாம். அதில் நம் நகரத்தார் மாணவர் இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் நமக்கு பெருமை சேர்க்கிறார்.

செல்வன் வீரப்பனுக்கு நமது மனமார்ந்த வாழ்த்துக்கள். அவர் மேலும் பல விருதுகள் பெற்று சிறந்தோங்க வேண்டுமென வாழ்த்தி, நமது அருள்மிகு தெண்டாயுதபாணியை வேண்டி வணங்குகிறோம்.

## சிங்கையில் முருகன்

சிங்கையில் முருகனுக்கு தங்கமயில் வாகனமாம்
சீரான வேலனுக்கு சிறப்ப வெள்ளித் தேராம்

வள்ளிக் கணவனுக்கு வழியெல்லாம் பால் குடமாம்
வடிவான அழகனுக்கு வாசலெல்லாம் காவடியாம்
கட்டி முருகனுக்கு கழுத்தெல்லாம் மணியாரம்

கந்த பெருமானுக்கு கால்கொள்ளா பொற் சதங்கை
கலியுக வரதனுக்கு கலிங்கத்துத் தலைப்பாகை

தெண்டாயுதத்தானுக்கு தினமும் தேனால் அபிஷேகம்
பால முருகனுக்கு நித்தியம் பால் அபிஷேகம்
பழனியாண்டிக்கு பகலெல்லாம் பால் அபிஷேகம்

செந்தூர் முருகனுக்கு செவ்வரளி மாலைகளாம்
பச்சை மயில் வாகனனுக்கு பச்சை மரு வாகை மாலைகளாம்

மால் மருகனுக்கு மல்லிகையால் செண்டுகளாம்
வேல் விருத்தனுக்கு விரும்பிய ரோசா மலர்களாம்

சோலை அழகனுக்கு சொற்பதத்தால் மாலைகளாம்
கதிரேசப் பெருமானுக்கு கவிதையாலே மாலைகளாம்

எட்டும் குடி புகழ் பரப்பும் எட்டுக்குடியான் எடுப்பான மண்டபமாம்
கொட்டும் முழக்கும் குதூகலமாய் தைப்பூசக் கூட்டமாம்
பட்டும் பவளமும் பச்சை வயிரமும் அலங்காரம்

தொட்டு விடும் சிரிப்பழகு, தொடர்ந்து அருளும் வரம் அழகு,
பாட்டாலே மயங்கும் பழனியாண்டி, பாட்டன் கட்டிய கோயில் அண்டிக்
கேட்டாலே கிடைக்கும் திருவருள் வாங்கிய சொத்தில் வாழ்ந்திடுவோமே!

- கோனாபட்டு M.நாச்சியப்பன் (Y0295)

## (ஊ) சிறு கதை

## மனித இயந்திரங்கள்

“அத்தா, அப்பச்சி, ராமு, சிவகாமி எல்லாரும் வாங்க சாப்பிடலாம்”, நாச்சியப்பன் சத்தமாக அழைப்பு விடுத்தான்.

லட்சுமி ஆச்சியும், நாகப்ப செட்டியாரும் ஆச்சரியமாகப் பார்த்தனர்.

“ஆமா, இன்றைக்கு எல்லாரும் ஒண்ணா உட்கார்ந்து சாப்பிடப் போறோம். இனி தினமும் அப்படித்தான்”, என்று சொல்லிவிட்டு மனைவி சிவகாமியை பார்த்தான் நாச்சியப்பன்.

அவள் ‘என்ன வந்தது இன்று இவருக்கு’ என்பதுபோல் விழித்தாள்.

நாச்சியப்பன் தன் பெற்றோர் முகங்களில் மகிழ்ச்சி பொங்கியதை கவனிக்கத் தவறவில்லை. சாப்பாட்டுக் கடை முடிந்தது. அனைவரும் படுக்கச் சென்றனர். “ராமு, அய்யா, அப்பத்தாவுக்கு குட்நைட் சொல்லு”, என்றான் நாச்சியப்பன்.

சிவகாமி ‘இன்னைக்கு இவரு நல்ல மூட்ல இருக்காரே’ என்று நினைத்துக்கொண்டே படுக்கைக்குச் சென்றாள்.

“ஆத்தா...தலைவலி எப்படி இருக்கு?”, என்று கேட்டுக்கொண்டே பெற்றோரின் படுக்கை அறைக்குள் சென்ற நாச்சியப்பன், “கொண்டா... தலைவலித் தைலத்தை... நானே தேய்த்து விடறேன்”, என்று சொல்லி லெட்சுமி ஆச்சி நெத்திப் பொட்டில் நன்கு தேய்த்து விட்டான்.

“போதும் வுடுடா...”, என்றாள் லெட்சுமி ஆச்சி.

“அத்தா, இன்னக்கி உன் மடியில படுத்துத்தூங்கப்போறேன்”, என்று சொல்லிக்கொண்டே தாயின் மடியில் படுத்துக் கொண்டான் நாச்சியப்பன்.

“என் மகனைப் பாருடா ராமு... என் செல்ல மகன்...”, என்று பேரனைக் கூப்பிட்டுக் காட்டின லெட்சுமி ஆச்சி, மகனின் தாடையை உருவி முத்தமிட்டாள்.

“அப்பச்சி ... உங்களுக்கு கால் வலியெல்லாம் எப்படி இருக்கு, கொஞ்ச நேரம் கால் அமுக்கிவிட்டுப் போறேனே”, என்று சொல்லி கால் அமுக்கிவிட ஆரம்பித்தான் நாச்சி.

“வேண்டாம். நீ போய்ப் படுத்துக்க”, என்றார் கிழவர். லெட்சுமி ஆச்சி, நாகப்ப செட்டியாரும் தங்கள் மகனைப் பற்றி என்னவெல்லாம் பேசிக் கொண்டோமே என்று நினைத்துக் கொண்டனர். அவர்களின் கண்கள் கலங்கின. அன்று இரவு நிம்மதியாய் உறங்கப் போயினர் இருவரும்.

நாச்சியப்பன் தன் பெட்ரூமுக்குத் திருப்தியுடன் திரும்பினான். தான் மாறிப்போனதை நினைத்துப் பார்த்து மகிழ்ந்தான்.

அன்று காலையில்....

உலகம் சுறுசுறுப்பாக இயங்க ஆரம்பித்திருந்தது. வானம் கொஞ்சம் கொஞ்சமாய் வெளுத்துக் கொண்டிருந்தது. சிங்கப்பூர் தெருக்களில் விதவிதமான விலை உயர்ந்த கார்கள் வழுக்கிக் கொண்டிருந்தன. மோட்டார் சைக்கிள்கள் சர் சர்ரென்று சீறிக்கொண்டிருந்தன. உயரமான கட்டடங்கள் விண்ணைத் தொடமுயன்று இங்குமங்கும் இயங்கிக் கொண்டிருந்தன. நாச்சியப்பனும்தான்.

நாச்சியப்பனுடையது அழகான சிறு குடும்பம். மனைவி சிவகாமி, மகன் ராமு, வயதான பெற்றோர் லெட்சுமி ஆச்சி, நாகப்ப செட்டியார் 80 வயதுக் கிழவர்கள். இவர்களுடன் ஈசூன் 713-வது பிளாக்கிலே வசித்து வந்தான் நாச்சியப்பன்.

நாச்சியப்பனுக்கு உட்லண்ட்ஸில் தனியார் கம்பெனி ஒன்றில் உற்பத்தி அதிகாரி வேலை. கை நிறைய சம்பளம். கார் வைத்திருக்கிறான். சிவகாமியும் வீட்டில் இருந்தால் பொழுது போகவில்லை என்று வேலைக்குச் செல்கிறாள். குட்டிப் பையன் ராமு ஈசூன் பள்ளி ஒன்றில் நான்காம் வகுப்புப் படிக்கிறான். மூவரும் தினமும் 7 மணிக்கெல்லாம் கிளம்பி விடுவார்கள். போகிற வழியில்தான் ராமுவின் பள்ளியும், சிவகாமி வேலை பார்க்கிற நிறுவனமும்.

நாச்சியப்பன் போகிற வழியில் இறக்கி விட்டுச் செல்வான். அன்றும் அப்படித்தான் போய்க் கொண்டிருக்கையில் “என்னங்க உங்க அப்பச்சி ஆத்தாவுக்குக் கொஞ்சம் கூடத் தெரியாது. நாம அவசர அவசரமா புறப்படும் போதுதான் அவங்களும் எழுந்து பாத்ரூம், டாய்லெட்டுன்னு போய்க்கிட்டு... எந்த ஆபீசுக்குப் போக இப்படி அவசரப் படறாங்களோ தெரியலை...”, என்று அங்கலாய்த்தாள் சிவகாமி. நாச்சியப்பன் ஒன்றும் பதில் பேசாமலேயே காரை ஓட்டிக் கொண்டிருந்தான்.

“என்னங்க... நான் சொல்றது காதுல விழுதில்ல...”, மறுபடியும் நச்சரித்தாள் சிவகாமி.

“சரி... நான் சொல்லிடறேன். இனிமே நாம் ஆபீஸ்போன பிறகு வந்தாபோதும். அதுவரை அவங்க ரூம்ல இருக்கிற டாய்லெட்டையே உபயோகிச்சுக்கச் சொல்லிடறேன். போதுமா... “. நாச்சியப்பனின் இந்த பதில் அவளுக்குப் போதுமானதாக இருந்தாலும் எங்கே தன் மீது உள்ள கோபத்தில்தான் அப்படிச் சொல்லுகிறானோ என்று நினைத்த சிவகாமி “இல்ல... என்னத்துக்கும்... இந்த வயசான காலத்துல, குறுக்க நெடுக்க

நடந்து கீழே விழுந்துட்டா என்ன பன்றது. நாம போனப்புறம் சாவகாசமா எல்லாம் பண்ணலாமேன்னுதான்", என்று இழுத்து முடித்தாள்.

நாச்சியப்பன் பேசாமல் காரை ஓட்டிக் கொண்டிருந்தான்.

"என்னங்க..."

"ம் சொல்லு.."

"இல்ல, உங்க அத்தா, அப்பச்சி வாக்கிங் போறாங்களாம், இந்த தள்ளாத வயசுல அதெல்லாம் தேவையா?". லிப்டுதான்னாலும் 11-வது மாடிலேர்ந்து இறங்கணுமா? வீட்டுக்குள்ளேயே நடக்கச் சொல்லுங்க..."
"ம்... சரி" பேசிக் கொண்டே வந்ததில் ராமுவின் பள்ளி வந்ததும்

"டாடி என் ஸ்கூல்..." என்று கத்தினான் ராமு.

ராமுவை இறக்கி விட்டு 'பை' சொல்லி விட்டு தொடர்ந்தனர்.

நாச்சியப்பன் கேட்டான் "அவங்களுக்கு என்ன வச்சிருக்க சாப்பிட?"

"பிரட் இருக்கு... ஜாம் எடுத்து வச்சிருக்கிறேன், காபி போட்டு பிளாஸ்க்குலே வச்சிருக்கிறேன்..."

"மதியத்துக்கு...?"

சோறு குக்கர்ல வச்சிருக்கேன், சாம்பார் இருக்கு உருளைக் கிழங்கு கருவாட்டு பொறியல் இருக்கு. தயிர் இருக்கு"

"சரி..."

சிவகாமியின் கம்பெனி வந்ததும் இறக்கி விட்டுக் கார் பறந்தது. அன்று மாலை சீக்கிரமே வேலைகளை முடித்துக்கொண்டு புறப்பட்டான் நாச்சியப்பன். நண்பன் சுப்பிரமணி விருந்துக்கு அழைத்திருந்தான். சுப்பிரமணி நாச்சியப்பனின் நெடுநாளைய நண்பன். வீட்டு விசயங்களில் உரிமையோடு தலையிட்டுப் பேசுவான்.

தொலைபேசியில் சுப்பிரமணியைத் தொடர்பு கொண்டான் நாச்சியப்பன் "ஹலோ... நான்தான் நாச்சி... நான் உங்க வீட்டுக்குத்தான் வந்துக்கிட்டிருக்கேன்..."

"சரி.. சரி...", ஒற்றை வரியில் முடித்தான் சுப்பிரமணி. பின்பு மனைவியைத் தொடர்பு கொண்டான் நாச்சியப்பன்.

நான் சுப்பிரமணி வீட்டுக்கு போய்க்கிட்டிருக்கேன். நீ வீட்டுக்கு ராமுவை அழைச்சிக்கிட்டு போயிடு."

"சரி... நீங்க உங்க பிரண்டோட கதை அளக்காம சீக்கிரமா வீட்டுக்கு வாங்க"

"ம்"

"சரி நீங்க வந்திடுங்க ராமுவை டியூசன்லேர்ந்து நான் அழைச்சிட்டுப் போறேன்", பேசிமுடித்தாள் சிவகாமி. சுப்பிரமணி ஜுரோங்கில் வசித்து வருகிறான். அவன் மனைவி வள்ளியம்மை, மகள் கவி சின்னப் பொண்ணு, நர்சரி படிக்கிறாள். அனைவரும் அன்பாய்ப் பழகுவார்கள். இருவர் குடும்பங்களும் அவர்கள் பாட்டன்காலத்தில் சிங்கப்பூரில் குடியேறிய குடும்பங்கள். இதுவரையில் உறவில் எந்த விரிசலும் இல்லாமல் வளர்ந்துதான் வந்திருக்கிறது, அவர்கள் நட்பு.

பலவற்றையும் நினைத்தவாறே கதவைத் தட்டினான் நாச்சியப்பன்.

கதவைத் திறந்த வள்ளியம்மை "வாங்க" என்று முகத்தைத் திருப்பிக் கொண்டு கேட்டுவிட்டு சென்று விட்டாள்.
ஏதோ கணவன் மனைவிக்குள் பிரசினையாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டான் நாச்சியப்பன்.

"சுப்பிரமணி... கவிதா... யாரு வந்திருக்கா பாரு", என்று அழைத்துக் கொண்டே உள்ளே சென்ற நாச்சியப்பன் சோபாவில் அமர்ந்தான்.

உள்ளே இருந்து சுப்பிரமணி வெளியே வந்தான்.

"வா..." என்று சொல்லிவிட்டு உள்ளே போய்விட்டான். நாச்சியப்பனுக்குத்தான் சந்தேகப்பட்டது சரிதான் ஏதோ பிரசினை என்று நினைத்துக் கொண்டு "கவிக்குட்டி இங்கே வா உனக்கு அங்கிள்

சாக்லேட் வாங்கி வந்திருக்கேன் பாரு", என்று அன்போடு சாக்லேட் டப்பாவை எடுத்து நீட்டினான்.

"வேண்டாம்" என்று குழந்தை தாயிடம் போய் ஒட்டிக் கொண்டது. எல்லாம் வித்தியாசமாக இருந்தது, நாச்சியப்பனுக்கு. வள்ளியம்மை வெளியே வந்து, 'சாப்பிடுங்க' என்று சொல்லி விட்டு உள்ளே போய் விட்டாள்.

டைனிங் டேபிள் வகை வகையான அயிட்டங்களோடு நிரம்பி வடிந்தது. யாரும் வெளியில் வந்து அவனுடன் பேசாததால் ஜன்னலையே பார்த்துக் கொண்டிருந்தான் நாச்சியப்பன்.

உள்ளே வள்ளியம்மையும் சுப்பிரமணியும் பேசிக் கொண்டது நாச்சியப்பனுக்கு மேலும் குழப்பத்தை விளைவித்தது.

"என்னங்க நீங்களும் அவரோட சாப்பிடுங்க உங்களுக்குப் பிடித்த வத்தக் குழம்பு, பால் பாயசம் வச்சிருக்கேன்."

"உன்னைய விடவா எனக்கு வத்தக் குழம்பும் பாயசமும் பிடிக்கும்.." என்றான் சுப்பிரமணி.

"ரெம்ப கிண்டல் செய்யாதீர்கள்" செல்லமாக கோபித்துக் கொண்டாள் வள்ளியம்மை.

கணவன், மனைவி நன்றாகத்தான் பேசிக்கொள்கிறார்கள். பிறகு ஏன் நம்மிடம் முகம் கொடுத்து யாரும் பேசவில்லை. வேறு ஏதாவது ஆபீஸ் பிரச்சனையாக இருக்கும் என்று நினைத்த நாச்சியப்பன் தானாக பேச்சை ஆரம்பித்தான். "டேய் நீ எனக்கு ஆபீசுக்கு போன் பண்ணியிருந்தியா?"

கொஞ்ச நேரத்துக்கு சுப்பிரமணியிடம் இருந்து பதில் இல்லை.

"உன்னைத்தான்..." என்றான் நாச்சியப்பன்.

"ம்...இல்ல..." என்று நாச்சியின் முகத்தைப் பார்க்காமலே பதில் சொன்னான் சுப்பிரமணி.

இருவரும் சாப்பிட உட்கார்ந்தனர். வள்ளியம்மை பரிமாறினாள்.

நாச்சியப்பனுக்கு எல்லாமே வழக்கத்துக்கு மாறாக இருந்தது. இவர்கள் தன்னைத் தவிர்க்கிறார்கள், ஒதுக்குகிறார்கள் என்பது புரிந்தது. அடக்கமுடியாமல் கேட்டேவிட்டான் “என்ன இன்னிக்கு யாருமே சரியா பேச மாட்டேங்கறீங்க”.

“ஒண்ணுமில்லை” வள்ளியம்மையின் ஒற்றை பதில். சுப்பிரமணி முகத்தை திருப்பிக் கொண்டிருந்தான். நாச்சியப்பன் முதல் வாய் சோற்றை பிசைந்து வாயில் வைத்தான். இறங்கவில்லை. சிக்கியது. சாப்பாட்டில் கையை உதறிவிட்டு எழுந்தான். கோபத்தில் கத்தினான் “என்னடா என்ன ஆச்சு உனக்கு, நான் என்ன தப்பு பண்ணேன், ஏன் யாரும் சரியா பேச மாட்டேங்கறீங்க. நான் ஏதாவது தப்பு பண்ணியிருந்தா, ஏண்டா இப்படி பண்ணினேன்னு கேளு. ஆனா, பேசாம மட்டும் இருக்காதே. அந்த தண்டனையை, என்னால தாங்க முடியலைடா” நாச்சியப்பன் கண்கள் கலங்கிப் போய் இருந்தன.

சுப்பிரமணி பதில் பேசவில்லை. வள்ளியம்மையைப் பார்க்க இருவரும் ஏதோ எதிர்பார்த்தது நடந்து விட்டது போல உள்ளுக்குள் சிரித்துக் கொண்டதுபோல பட்டது நாச்சியப்பனுக்கு.

“ம்... அப்படி வா....இப்ப நீ சொன்னதையெல்லாம் நினைவுல வச்சுக்க கூல் டவுன். இங்க வா...” என்று தோளைப்பிடித்து அணைத்துக் கொண்டான் சுப்பிரமணி.

“ஆமாண்ணே, நாங்க இது வரை நடத்தியது சின்ன நாடகம். தப்பா நினைக்காதீங்க, சாரி” என்று சிரித்துக் கொண்டே சொன்னாள் வள்ளியம்மை. சுப்பிரமணி பேச்சை ஆரம்பித்தான் “கொஞ்ச நேரம் நாங்க பேசாமல் இருந்ததையே உன்னால் தாங்கிக்க முடியலையே, நாள் முழுக்க, வாரம் பூரா, மாதம் பூரா உன்னைப் பெத்து, வளர்த்து ஆளாக்கின பெத்தவங்ககிட்ட நீங்க யாரும் பேசாமலேயே குடும்பம் நடத்துறீங்களே. அது அவங்களை எப்படி பாதிச்சிருக்கும்னு நினைச்சுப் பார்த்தியா ?”

“டேய் அவங்ககிட்டே பேசக்கூடாதுன்னு எதுவும் இல்லைடா. ஆனா அதுக்கெல்லாம் எங்கடா நேரம் இருக்கு”

“உன் மனைவி கூட பேச நேரம் இருக்கு, உன் மகன் கூட பேச நேரம் இருக்கு, என் கூட பேச நேரம் இருக்கு, ஆனா அவங்க கூட பேச மட்டும் நேரம் இல்லையா?”

“உனக்கே நல்லாத்தெரியும் நான் அதிகமா பேசுற ஆள் இல்ல. தேவையில்லாமல் பேச மாட்டேன். அவங்க பேர்ல பேங்கில் பணம் போட்டு வச்சிருக்கேன். அவங்களுக்கு டாக்டர்கிட்ட பீரியாடிக் செக்கப்புக்கு ஏற்பாடு பண்ணியிருக்கேன். அவங்களை முதியோர் இல்லத்துல விடாம என் கூடவே வச்சிருக்கேன். அவங்களுக்கு எந்த வேலையும் கொடுக்கறதில்லை. சாப்பாடு ரெடி பண்ணி வச்சிட்டுத்தான் வேலைக்கு போறோம். அவங்களை கடைசிவரை நல்லா பாத்துக்கணும்னு நெனைக்கிறேன். இன்னும் என்னடா, உனக்கு.

“ஆமா உனக்கு அவங்க மேல அன்பு இல்லைன்னு சொல்லலை, ஆனா அன்பை மனசுக்குள்ளேயே வச்சிருந்தா போதாதுடா. வாயைத் தொறந்து பேசு. அவங்களை உன் வீட்டுக்குள்ளேயே சிறை வச்சிருக்கிறமாதிரி இல்லையா. ஆத்தா, அப்பச்சின்னு வாயைத்திறந்து கூப்பிடு. அவங்க மனசுக்குள்ளேயே அழறது உனக்கு தெரியாதுடா. அவுங்க மன உளைச்சல் தாங்காம உள்ளுக்குள்ளேயே புழுங்கறாங்கன்னு தெரியுமா உனக்கு? இன்னைக்கு உன்னோட பேசலாம்னு வீட்டுக்கு போன் பண்ணினேன். அப்பச்சி போனை சரியா கட்பண்ணலை. அப்ப அத்தாவும் அப்பச்சியும் நீ பேசலைன்னு கவலைப்பட்டது, ஒருவரை ஒருவர் தேற்றிக் கொண்டது எதேச்சையா என் காதுகளில் விழுந்தது. அதனாலதான் உனக்கு இப்படி ஒரு ஷாக். என்னை மன்னிச்சிடு.”

“அப்ப என்னை நடிக்கச் சொல்ற....”

“அது நடிப்பு இல்லைடா, மத்தவங்களை சந்தோசமாக்க, அன்பை வெளிக்காட்டறது, பேசறது, ஹாய் சொல்றதும், தேங்ஸ் சொல்றதும் இல்லையா....அதுமாதிரி., அது நடிப்புன்னா அதை நீ மொதல்ல கத்துக்க, தப்பில்ல. மனசுல ஒரு அக்கவுண்ட் புக் ஓப்பன் பண்ணு. அதுல ஒரு நாள்ல எத்தனை பேருக்கு சந்தோசம் கொடுத்தியோ அதை வரவுல வைய்யி. எத்தனை பேருக்குத் துன்பம் கொடுத்தியோ அதை செலவுல வைய்யி. உன் நோட்ல வரவு அதிகமா இருக்கனும்னா அன்பாபேச கத்துக்க.....நடிக்க கத்துக்க.......செலவு அதிகமாகனும்னா நீ ஒண்ணும் செய்யவேணாம். பேசாம இருந்தாலே போதும். சற்று முன் நீ அனுபவிச்சுச் சொன்னியே அதைவிடக் கொடுமையான தண்டனை இல்லைன்னு’, அவ்வளவுதான். நாம் மனித இயந்திரங்கள் அல்ல. மனம் உள்ள மனிதர்கள்....” உணர்ச்சி வசப்பட்டான் சுப்பிரமணி.

“போதும்டா....எனக்கு நல்லாப் புரியுதுடா. என் நெஞ்சில் ஆழமா பதியிறமாதிரி சொல்லிட்டேடா. திருத்திக்கிறேன்”, கண்கள் கலங்கின நாச்சியப்பனுக்கு, தொடர்ந்தான்....

“உன்னைப் போல நண்பன் கிடைச்சதுக்குப் பெருமைப் படறேன்டா. சரி நான் புறப்படறேன். அம்மா, அப்பா மனைவி குழந்தையோட ஒண்ணா உட்கார்ந்து சாப்பிடப்போறேன்”.

சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் கழகம் சிங்கப்பூர் வானொலியின் ஒலி 96.8 உடன் இணைந்து GGS புத்தகக் கடை ஆதரவுடன் 1998 ல் நடத்திய சிறுகதைப் போட்டியில் பொதுப்பிரிவில் இரண்டாம் பரிசு பெற்ற கதை.

- ராம. வயிரவன் (Y0252)

(திரு ராம. வயிரவன் அவர்களுடைய ஒப்புதலுடன், இக்கதையில் வரும் பெயர்கள் நகரத்தாருக்கு உரிய பெயர்களாக மாற்றப்பட்டுள்ளன. இது யாரையும் புண்படுத்தும் நோக்கம் கொண்டதல்ல என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறோம்.)

# 6. மகளிர் பகுதி

## (அ) கவிதை

### மகளிர் தினம்

என்னில் இளையவருக்கு என்னுடைய
மகளிர் தின வாழ்த்துக்கள்...

பொறுமையில் பூமா தேவியையும்,
தொண்டுணர்வில் அன்னை தெரசாவையும்,
நிகர்த்த பெண் - வீட்டிலும், நாட்டிலும்
போற்றப்பட வேண்டியவள்...

அலுவலகம் சென்று வருவாய் ஈட்டும்
பெண் ஆதரிக்கப்பட வேண்டியவள்...
கணவர் தரும் வருவாயை
சிந்தித்து செயல்பட்டு சேமிப்பவள்
போற்றப்பட வேண்டியவள்...

நாட்டில் உள்ளோரை போற்றிப் பேச
உலகத்தினர் உள்ளனர். நம்
வீட்டில் உள்ள கண்மணிகளை

தினம் போற்றா விட்டாலும்,
மகளிர் தினத்தன்றாவது அவசியம்
வாழ்த்துங்கள்

- சுப. விசாலாட்சி (L134)

## வீட்டுக் குறிப்புகள்

- பிளாஸ்கில் ஒரு ஸ்பூன் சர்க்கரை போட்டு வைத்தால் கெட்ட வாடை வராது.

- சட்டைக் காலரில் ஏற்படும் அழுக்கைத் தடுக்க காலர் பகுதியில் கொஞ்சம் ஷாம்பு தடவி, பிரஷ்ஷினால் தேய்த்தால் அழுக்கு எளிதில் நீங்கிவிடும்.

- புத்தகத் தொகுப்பு

## (ஆ) நள பாகம் - சமையல் பகுதி

### (1) சமையல் டிப்ஸ்

- தோசைக்கு அரைக்கும் போது உளுந்தின் அளவைக் கொஞ்சம் குறைத்து, பதிலாக வெண்பூசணியைப் போட்டு அரைத்து வார்த்தால் தோசை பிரமாதமாக இருக்கும்.

- கேசரி செய்யும் போது உலர்திராட்சைப்பழங்களுக்குப் பதில் பேரீச்சம் பழத்தை சிறு துண்டுகளாக்கி நெய்யில் வறுத்துப் போட்டால் நன்கு சுவையாக இருக்கும்.

- உருளைக் கிழங்குப் பொரிப்பதற்கு முன் சிறிது பயிற்றமாவில் புரட்டிக் கொண்டால் பொரியல் மொரமொரப்பாக இருக்கும்.

- சேமியா பாயசம் செய்யும் போது சேமியா வெந்து ஒன்றோடொன்று ஒட்டிக் கொள்வதைத் தவிர்க்க, சேமியா வெந்ததும் சர்க்கரை, பால் சேர்ப்பதற்கு முன் ஒரு கோப்பை குளிர்ந்த தண்ணீரைச் சேர்க்க வேண்டும். சேர்ந்திருந்தாலும் பிரிந்துவிடும்.

- புத்தகத் தொகுப்பு

## (2) சமையல் குறிப்பு

### பழ கேசரி (Fruit Kesari)

**தேவையான பொருட்கள்**

| | | |
|---|---|---|
| அன்னாசிப்பழம் | 1/2 கோப்பை | |
| ரவை | 1 கோப்பை | |
| சர்க்கரை | 1 கோப்பை | |
| நெய் | 1/2 கோப்பை | |
| மஞ்சள் வண்ணம் | சில துளிகள் | |
| அன்னாசி எஸன்ஸ் | சில துளிகள் | (அதிகமாகச் சேர்க்க வேண்டாம்) |

**தேவையான பழவகைகள்**

| | | |
|---|---|---|
| பச்சைத் திராட்சை | 100 கிராம் | |
| உலர்ந்த திராட்சை | 50 கிராம் | |
| முந்திரிப் பருப்பு | 50 கிராம் | (சிறு துண்டுகளாக உடைத்துக் கொள்ளவும்) |

**செய்முறை:**

ரவையை 1/2 கப்பு நெய்யில் வாசனை வரும் வரை வறுக்கவும். 2 கப்பு தண்ணீரை அடிகனமான பாத்திரத்தில் போட்டு கொதிக்க விடவும். கொதிக்கும் தண்ணீரில் ரவையைப் போடவும். ரவை வெந்தவுடன் சர்க்கரையை போடவும். மஞ்சள் வண்ணத்தைச் சேர்க்கவும். இடையிடையே சிறிது சிறிதாக நெய் விடவும். கேசரி, ஹல்வா மாதிரி வரும் பொழுது அடுப்பிலிருந்து இறக்கவும். அன்னாசியைத் சிறு துண்டுகளாக நறுக்கிச் சேர்க்கவும். முந்திரி, உலர்ந்த திராட்சை இரண்டையும் 2 மேஜைக் கரண்டி நெய்யில் வறுத்துக் கொள்ளவும். பழவகைகளையும், முந்திரியையும், குங்குமப்பூவையும் சேர்த்து சிறிது எஸன்ஸ் சேர்த்து கலக்கவும்.

**குறிப்பு:**

அன்னாசி வில்லைகளின் மேல் உப்பை தடவி சிறிது நேரம் வைத்து விட்டு, உள்ளங்கையில் அழுத்திப் பிழிந்து விடவும். சிறிதளவு சர்க்கரையில் பாகுவைத்து நனைத்தெடுத்து சிறு துண்டுகளாக வெட்டிப் போடவும். இது அன்னாசியில் உள்ள அரிப்பை நீக்கிவிடும். சூப்பர் மார்க்கெட்டில் டின்னில் அடைத்து விற்கப்படும் பழத்தையும் போடலாம்.

- அமிர்தவள்ளி (Y0251)

## கோபி மட்டர் மசாலா (Gobi Mutter Masala)

**தேவையான பொருட்கள்**

| | |
|---|---|
| காலிப்ளவர் | 2 |
| உரித்த பச்சைப் பட்டாணி | 2 கோப்பை |
| எண்ணெயும் வனஸ்பதியும் | 2-1/2 மேசைக்கரண்டி |
| தக்காளி சாஸ் | 1/2 கோப்பை |
| பட்டை | 2 அங்குலத்துண்டு |
| இலவங்கம் | 4 |
| சோம்பு | 1/2 தேக்கரண்டி |

**அரைத்துக் கொள்ள வேண்டியவை:**

| | |
|---|---|
| வெங்காயம் | 2 பெரியது |
| பூண்டு | 10 பல்லு |
| சீரகம் | 1 தேக்கரண்டி |
| தனியா (மல்லி) | 1-1/2 தேக்கரண்டி |
| முந்திரிப்பருப்பு | 15 |
| மிளகாய்த்தூள் | 1-1/2 தேக்கரண்டி |
| பச்சைமிளகாய் | 2 |
| மஞ்சள்தூள் | 1/2 தேக்கரண்டி |

**செய்முறை:**

காலிப்ளவரை பெரிய துண்டுகளாக நறுக்கி, நன்றாகக் கழுவி, பட்டாணி சேர்த்து வேகவைக்கவும். மசாலாவை அரைத்து தனியாக வைத்துக்கொள்ளவும். எண்ணெயைக் காயவைத்து, பட்டை, இலவங்கம், சோம்பு போட்டு தாளிக்கவும். அரைத்த மசாலாவைப் போட்டு, மிதமான அனலில் எண்ணெய் பிரியும் வரை வதக்கவும். இதில் வேகவைத்த காய்கறிகள், உப்பு, தண்ணீர் சேர்த்து கலக்கவும். குழம்பு நன்றாகக் கெட்டியாகும்வரை வேக வைக்கவும். தக்காளி சாஸ் தெளித்து நன்றாகக் கலக்கவும். ஓரிரு நிமிடம் கழித்து அடுப்பிலிருந்து இறக்கி, கொத்துமல்லி கறிவேப்பிலை தூவி அலங்கரிக்கவும்.

- அமிர்தவள்ளி (Y0251)

### ❖ சமையல் குறிப்பு (அடுப்பில்லா சமையல்)

நெருப்பில் சமைப்பதால் நுண்ணிய சத்துக்கள் அழிந்து விடுகின்றன. சமைக்காமல் சாப்பிட்டால் தாது உப்புக்களும் வைட்டமின்களும் அப்படியே நமக்கு கிடைக்கும்; சகல நோய்களும் தீரும். இது அனுபவ

உண்மை, நெருப்பில் வகை வகையாகச் சமைப்பது போல் நெருப்பில்லாமலும் வகை வகையாக உணவு தயாரித்து உண்ணலாம். சமைத்தல் என்றால் "பக்குவப்படுத்துதல்" என்பதுதானே பொருள், நெருப்பிலிடுவது என்பதல்லவே. ஒரு முறை அடுப்பில்லாமல்தான் சமைத்துப் பாருங்களேன்.

**கேரட் கீர்**

**தேவையான பொருட்கள்** (5 பேர் கொண்ட ஒரு குடும்பத்துக்கு)

| | |
|---|---|
| கேரட் | - 1/2 கிலோ |
| தேங்காய் பால் | - பெரிய தேங்காய் 1 |
| நாட்டுச் சர்க்கரை | - 100 கிராம் |
| ஏலக்காய் | - 10 |
| பச்சைக் கற்பூரம் | - 4 சிட்டிகை |

## செய்முறை

கேரட்டுத் துருவலைக் கிரைண்டர் அல்லது மிக்ஸியில் ஆட்டி சாறு எடுத்து அத்துடன் தேங்காய்ப்பால், நாட்டுச் சர்க்கரை கலந்து கொள்ள வேண்டும். வாசனைக்காக ஏலக்காய், பச்சைக் கற்பூரம் சேர்க்கலாம்.

- புத்தகத் தொகுப்பு

## அழகுக் குறிப்புகள்

❖ கறிவேப்பிலையை நன்றாக அரைத்து அத்துடன் முட்டை வெள்ளைக் கருவைச் சேர்த்து தலைக்குத் தேய்த்துக் குளித்தால் கூந்தல் வளர்ந்து தரையைத் தொடும்.

❖ உதட்டின் கருமை மறைய தேங்காய் எண்ணெய் தடவி வந்தால் ஒரு வாரத்திற்குள் கருமை மறைந்துவிடும்.

❖ புதினா இலை, வேப்பிலை, துளசி இவற்றை சமமாக எடுத்து அரைத்து முகத்தில் தடவி வந்தால் முகப்பரு மறையும்.

- புத்தகத் தொகுப்பு

## (3) தெரிந்து கொள்ளுங்கள்

❖ ஆறிப் போன காபியை மீண்டும் சுட வைத்து சாப்பிடாதீர்கள். அது உடலுக்கு நல்லதல்ல.

❖ வெந்நீரில் கிராம்பை ஊறவைத்து அதை வடிகட்டி காலை, மாலை குடித்து வந்தால் கர்ப்பிணி பெண்களுக்கு வாந்தி மட்டுப்படும்.

- அரிசியில் ஒரு வகை அமிலச்சத்து உள்ளது எனவே வெறும் அரிசியை சாப்பிடக் கூடாது. இது நாளடைவில் உடல்நலப் பிரச்சினைகளை ஏற்படுத்தும்.

- புத்தகத் தொகுப்பு

(4) **கோலம்**



பிரியா ரவி (L082)

# சிறுவர்கள் பகுதி

**(அ) புதிர் பகுதி (சென்ற மலரில் வெளி வந்த புதிரின் விடை)**

1. திரை அரங்கம் இல்லாத நாடு எது? **பூடான் / சவுதி அரேபியா**
2. எந்த மாதத்தில் குழந்தை அவ்வளவாக அழாது? - **பிப்ரவரி**
3. கொசுக்களே இல்லாத நாடு எது? - **பிரான்ஸ்**
4. தண்ணீருக்கு வெளியேயும் வாழக்கூடிய மீன் எது? - **ஆசியாவில் உள்ள மேடக் என்னும் மீன்.**
5. பாம்புகளே இல்லாத தீவு எது? - **ஹவாய் தீவு**
6. உலகில் ஒன்பது நிறங்கள் கொண்ட பறவை எது? - **ஆஸ்திரேலியாவை சேர்ந்த பித்தா**

## (ஆ) உங்கள் சிந்தனைக்கு........

### சந்தோஷமாக வாழ வழிகள்

| | | |
|---|---|---|
| கிளி | போல் | இனிமையாகப் பேசு |
| கொக்கு | போல் | ஒருமையுடன் தெய்வத்தை நினை |
| ஆடு | போல் | நன்றாக மென்று சாப்பிடு |
| நாயைப் | போல | நன்றி உணர்வுடன் இரு |
| காக்கை | போல் | குறிப்பறிந்து சொல் |
| தேனீ | போல் | உழை |
| எறும்பு | போல் | சுறுசுறுப்பாக இரு |

### என்றும் இல்லை

| | |
|---|---|
| சவுதி அரேபியாவில் | - நதிகள் இல்லை |
| ஆப்கானிஸ்தானில் | - ரயில்கள் இல்லை |
| சந்திரனில் | - வாயு இல்லை |
| பாலில் | - இரும்புச் சத்து இல்லை |
| யானையின் துதிக்கையில் | - எலும்பு இல்லை |
| கரடி | - நீர் அருந்துவது இல்லை |
| ஈக்களுக்கு | - பற்கள் இல்லை |
| முதலைக்கு | - நாக்கு இல்லை |
| வண்ணத்துப்பூச்சிக்கு | - வாய் இல்லை |
| ஈசலுக்கு | - வயிறு இல்லை |
| வௌவாலுக்கு | - பார்வை இல்லை |

## (இ) அதிசயம்! ஆனால் உண்மை!

### ❖ அதிசய எண்:

பின்வரும் எண்களை, ஓர் எண் மீதமில்லாமல் வகுக்கும். ஆனால் அந்த எண்ணை வேறு எந்த எண்ணாலும், மீதமில்லாமல் வகுக்க முடியாது. அந்த எண் எது?

111, 222, 333, 444, 555, 666, 777, 888, 999

**விடை**: அடுத்த இதழில் ................

(ஈ) வண்ணம் தீட்டும் பகுதி :



Follow the Alphabet




# 9. இதர செய்திகள்

## (1) திருமணம்

❖ நமது சங்க உறுப்பினர், காளையார்மங்கலம் குப.சித.கண. நடராஜன் செட்டியார் (L061), சிவகாமி ஆச்சி தம்பதியினரின் புதல்வி, செல்வி இந்திராவிற்கும், நாட்டரசன்கோட்டை கண.லெட்சுமணன் செட்டியார், ராமாயி ஆச்சி தம்பதியினரின் புதல்வன், செல்வன் சரவணனுக்கும், காளையார்மங்கலம் மணமகள் இல்லத்தில் 27-1-2008 ஞாயிற்றுக் கிழமை அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

❖ நமது சங்க உறுப்பினர், ஆத்தங்குடி பெரி. பெரிச்சியப்பன் செட்டியார் (Y0158), நாச்சாள் ஆச்சி தம்பதியினரின் புதல்வன், செல்வன் குமார்-க்கும், கோனாபட்டை சேர்ந்த அபிராமிக்கும். மணமகள் இல்லத்தில் 10-2-2008 ஞாயிற்றுக் கிழமை அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

“இல்லற வாழ்வில் இணைந்திருக்கும் இளம் தம்பதியினரை சிறப்புடன் வாழ வாழ்த்துகிறோம்”.

## (2) சதாபிஷேக விழா

❖ நமது சங்க உறுப்பினர், நாச்சியாபுரம் தியாகராஜா செட்டியார் (L121), நாச்சம்மை (எ) பஞ்சு ஆச்சி தம்பதியினரது 80 ஆம் ஆண்டு நிறைவு விழா, நமது அருள்மிகு தெண்டாயுதபாணி திருக்கோவிலில் 6-1-2008 அன்று, மிகவும் சிறப்பாக நடைபெற்றது.
"விழா தம்பதியினர் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ, அருள்மிகு தெண்டாயுதபாணியைப் பிரார்த்தனை செய்கின்றோம்"

## (3) மணி விழா

❖ நமது சங்க உறுப்பினர்கள், அழகு சுந்தரம் (Y0287), மற்றும் அழகு திருநாவிற்கரசு (Y0013), இவர்களது பெற்றோர், நாச்சியாபுரம் சே.சு.வி.அழகப்ப செட்டியார், அழ.காவேரி ஆச்சி தம்பதியினரது 60 ஆம் ஆண்டு நிறைவு விழா, நாச்சியாபுரத்தில் 6-3-2008 அன்று, மிகவும் சிறப்பாக நடைபெற்றது.
"விழா தம்பதியினர் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ, அருள்மிகு தெண்டாயுதபாணியைப் பிரார்த்தனை செய்கின்றோம்.

## (4) பிறப்பு

❖ நமது சங்க உறுப்பினர், கீழச்சிவல்பட்டி மு.மு.முத்தையா செட்டியார் (L044), மீனாள் ஆச்சி தம்பதியினரின் மகன் மணிகண்டன் (L038), கவிதா தம்பதியருக்கு, 25-02-2008 அன்று, ஆண் குழந்தை பிறந்துள்ளது.

❖ நமது சங்க உறுப்பினர், இராமச்சந்திரபுரம் சாத்தப்பன் அருணாச்சலம் (L210), அழகு தம்பதியருக்கு, 03-02-2008 அன்று, ஆண் குழந்தை (விக்னேஷ்) பிறந்துள்ளது.

"இப்பூவுலகில், புதிதாய்ப் பூத்துள்ள இப்பிஞ்சு மலர்கள் இறைவனின் திருவருளால் எல்லா வளமும், நலமும் பெற்றுப் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறோம்".

## (5) இறப்பு

❖ நமது சங்க உறுப்பினர், சண்முகநாதபுரம், சு.காசி செட்டியாரது (L044), தகப்பனார் ரெ. சுப்பிரமணியன் செட்டியார் 26-02-2008 இறைவனடி சேர்ந்தார்கள் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம், அவரது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

## (4) புது உறுப்பினர்கள்:

L231/ 01 / ALAGAPPAN ANNAMALAI
MATHUR / KANNUR / P.ALAGAPURI
Blk 62 Lorong 4 Toa Payoh, #11-105, Singapore -310062.
Tel: 67283842 / Hp: 94555414 / Email: pierreiza@hotmail.com

L232/ 1A / NADARAJAN S/0 CHIDAMBARAM
MATHUR / MANALUR / DEVAKOTTAI
Blk 307B, #02-48, Anchorvale Road, Singapore-542307.
Tel: 64045907 / Hp: 97471062 / Email: meena_j7@yahoo.com

L233/ 09 / SUBRAMANIAN S
ILLUPAIKUDI / NACHIAPURAM
BLK 289A, #04-212, BUKIT BATOK ST 25, SINGAPORE - 650289.
Tel: 65636144 / Hp: 96873584 / Email: ssmaniam@starhub.net.sg

L234/ 15 / ARUNACHALAM MUTHIAH
VAIRAVAN / PILLAYAR VAGUPPU / KARAIKUDI
BLK 287,#09-72, YISHUN AVE 6, SINGAPORE - 760287.
Tel: 67584843 / Hp: 91830645 / Email: arunmuthuu@hotmail.com

L235/ 09 / NAGAPPAN T
NEMAM / KARAIKUDI
BLK 298B #10-164, Compassvale St, SINGAPORE - 542298.
Tel: / Hp: 81818373 / Email: dba_nagappan@yahoo.com

L236/ 1A / SUBRAMANIAM M
ILLUPAIKUDI / KONAPET
BLK 414, #09-144, Pandan Garden, SINGAPORE - 600414.
Tel: 68964589 / Hp: 94233099 / Email: subu_mani_2000@yahoo.com

Y0507/ 09 / SATHAPPA NACHIAPPAN
VAIRAVAN / THAIYANAR VAGUPPU / ARIYAKUDI
Blk 118, #10-97, Clementi Street 13, Sunset Gateway Estate, Singapore - 120118.
Tel: 67796329 / Email: nachiappan@san-asia.com

Y0508/ 09 / DR. SWAMINATHAN VISWANATHAN
SOORAKUDI / PUDUVAYAL
Blk 917 Jurong West st 91, #12-156, Singapore - 640917.
Tel: 67288707 / Hp: 81188413 / Email: saaminathanv@gmail.com

Y0509/ 1B / RM. MANICKAM
NEMAM / ULAGAMPATTI
Blk 101 Jurong East Street 13, #03-192, Singapore - 600101.
Tel: 65617541 / Hp: 82659201 / Email: manics36@gmail.com

Y0510/ 01 / MEENAKSHISUNDARAM ATHAPPAN
ILLUPAIKUDI / OKKUR
No. 1 Sungai Kadut Street 3, Singapore – 729136.
Hp: 98939541 / Email: memitchu567@yahoo.com

Y0511/ 1B / SETHURAMAN PONNAPPAN
MATHUR / MANALUR / KULIPIRAI
Hp: 90283404 / Email: sethuramanp@yahoo.com

Y0512/ 09 / BASKAR SAMBANTHAM
MATHUR / MANALUR / KANDAVARAYANPATTI
Blk 274, #03-142, Yishun Street 22, Singapore.
Tel: 64044635 / Hp: 91470902 / Email: baskar.sambantham@citi.com

Y0513/ 15 / VEERAPPAN VEERAPPAN
IRANIYUR / PUDUVAYAL
Blk 319 Sembawang Close, #11-14, Singapore -750319.
Tel: 67260671 / Hp: 91460645 / Email: vr.veerappan@gmail.com

Y0514/ 15 / SUBBIAH NARAYANAN
MATHUR / KANNUR / RAYAVARAM
Blk 242 Yishun Ring Road, #03-1132, Singapore-760242.
Tel: 62577953 / Hp: 90616250 / Email: meenalsubbiah@hotmail.com

Y0515/ 1A / KARTHIK SOMASUNDARAM
ILLAIYANTHANGUDI / PERSENTOORUDAIR / SAKKANTHI
Blk 139, #09-1406, Jalan Bukit Merah, Singapore - 160138.
Tel: 62760819 / Hp: 90278314 / Email: vivekarthik81@yahoo.co.in

Y0516/ 1B / ARUMUGAM CHITHAMBARAM
ILLAIYANTHANGUDI / KINGUNI KUDAYAR / A.MUTHUPATTANAM
Blk 324 #04-112, Hougang Avenue 5, Singapore - 530324.
Tel: 62858216 / Hp: 94608555 / Email: arc_sic@rediffmail.com

Y0517/ 1A / N. NAGARAJAN
MATHUR / KINGUNI KUDAYAR / KILASIVALPATTI
13# 352 No.3 East Avenue, Bukit Batok, Singapore.
Hp: 98904740 / Email: nnraj888@yahoo.com

Y0518/ 01 / ALAGAPPAN PALANIAPPAN
IRANI / KARAIKUDI
Blk 847 #02-285, Singapore - 730847
Hp: 94889834

Y0519/ 09 / CHIDAMBARAM. CT
ILLAIYANTHANGUDI / PERUMARUDUR / DEVAKOTTAI
Blk No 628, #12-1668, Bedok Reservoir Road, Singapore - 470628.
Hp: 90080572 / Email: chidambaram.chidambaram@gmail.com

**(5) <u>உறுப்பினர்களின் முகவரி தொலைப்பேசி / கையடக்கத் தொலைப்பேசி / மின் அஞ்சல் மாற்றம் :</u>**

**(புது முகவரிக் கையேடு வெளிவர இருப்பதால், மாற்றங்கள் மிக அதிகமான எண்ணிக்கையில் உள்ளன. அதனால் இந்த மலரிலும், அடுத்த மலரிலும் இப்பகுதி இடம் பெறாது என்று தெரிவித்துக் கொள்ளுகிறோம். உங்கள் புரிந்துணர்வுக்கு எங்களது மனமார்ந்த நன்றி..)**

**(6) மாணவர்களுக்கு ஓர் முக்கிய அறிவிப்பு**

சென்ற ஆண்டு நடைபெற்ற குடியரசின் PSLE, 'O' Level மற்றும் 'A" Level தேர்வுகளில் சிறப்பான மதிப்பெண் பெற்று வெற்றி பெற்ற மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கு, இவ்வாண்டும் வழக்கம்போல கலைநிகழ்ச்சியில், பரிசுகள் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. எனவே 2007-ம் ஆண்டு மேற்குறிப்பிட்டுள்ள தேர்வுகள் எழுதிச் சிறந்த மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவியர் தங்களின் தேர்வுச் சான்றிதழின் நகலை, தங்கள் முகவரி, தொலைபேசி எண் விபரத்தோடு தலைவர் திரு. அரு, அருணாசலம் அவர்களுக்கு 31-05-2008 ஆம் தேதிக்குள் தபாலிலோ, தொலைப்பிரதி மூலமாகவோ அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். அனுப்ப வேண்டிய முகவரி : அரு.அருணாசலம், தொலைபேசி : 67931063, **<u>தொலைப்பிரதி : 67931063 (தொலைபேசியில் அழைத்து பிறகு அனுப்பவும்)</u>** தொலைபேசியில் அழைத்துச் சான்றிதழ் பெற்றுக்கொண்ட விபரத்தை உறுதி செய்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

**எங்களுக்கு கிடைத்த தேர்வுச் சான்றிதழ்கள் அடிப்படையிலேயே பரிசுக்குரிய மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.**

**(7) சந்தா பாக்கி**

சிங்கை நகரத்தார் சங்கத்தின் ஆண்டுச் சந்தா பாக்கி உள்ள உறுப்பினர்கள், சங்கத்தின் பொருளாளர்களையோ, தலைவரையோ அணுகித் தங்கள் சந்தா பாக்கிகளை உடனடியாக செலுத்தும்படி கேட்டுக் கொள்கிறோம்.

**<u>உங்கள் முக்கிய கவனத்திற்கு :</u>**
**2006-ஆம் ஆண்டு, அல்லது அதற்கு முன்பிருந்து சந்தா பாக்கி இருந்தால், மே மாதம் 1ஆம் தேதிக்குள் சந்தா பாக்கியை செலுத்த வேண்டும், சந்தா பாக்கி வைத்திருப்பவர்களின் பெயரும், முகவரி, விபரங்களும், புதிய முகவரி கையேட்டில் இடம் பெறாது என்பதை முன் கூட்டியே தெரிவித்துக்கொள்கிறோம்.**

நம் சங்க உறுப்பினர் திருமதி சௌந்தரநாயகி வயிரவன் (L126), நேர்காணல் பொழுது எழுப்பிய வினாவிற்கு, சுஜாதா கூறியதை இங்கே உங்களுக்காக தொகுத்துள்ளோம்.



**சிறந்த எழுத்தாளருக்கு அஞ்சலி**
என்னுடைய எழுத்துக்கள் வெற்றியடைந்துள்ளது. தனிப்பட்ட ஒரு மனிதனாகவே நான் என்னை கருதுகிறேன். ஆக நான் வேறு, என் எழுத்து வேறு. மக்கள் பாராட்டுவது என் எழுத்தையே தவிர, என்னை அல்ல. இதை நாம் நன்றாக புரிந்துக் கொண்டால், வெற்றியாளராகவும், அதே சமயம் எளிமையான மனிதராகவும் இருக்கலாம்.

\- வயி. சௌந்தரநாயகி (L126)

# நன்றி

மலருக்கு கதை, கவிதை, புதிர், சமையல் குறிப்பு, கோலம், மற்றும் இதர படைப்புகளை அனுப்பியவர்களுக்கும், விளம்பரம் தந்து ஆதரித்தவர்களுக்கும், மற்றும் தயாரிப்பில் உதவிய அனைவருக்கும், எங்களது மனமார்ந்த நன்றிகள்.

சென்ற மலரில் இருந்த சில சிறு அச்சு பிழைகளுக்கு வருந்துகிறோம். எங்களால் இயன்ற வரை இம்மலரை பிழைகள் இன்றி வெளியிட முயற்சித்திருக்கிறோம். இருந்தாலும் எதுவும் விடுபட்டிருப்பின் எங்கள் கவனத்திற்கு கொண்டு வந்தால், பிழைகளை அடுத்தடுத்த பதிப்புகளில் திருத்திக் கொள்ள உதவும்.

**மலரில் உங்களது படைப்புகளை (கதை, கவிதை, புதிர், சமையல் குறிப்பு, கோலம்) வெளியிட விரும்பினால், pyramid.pms @gmail.com என்ற மின்னஞ்சல் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும். மலரில் இடம் இருப்பதன் அடிப்படையில் படைப்புகள் பரிசீலனை செய்து வெளியிடப்படும்.**

**பின் குறிப்பு:** படைப்புகள் பொது நலன், பொதுக்கருத்து சார்ந்ததாக இருக்கவேண்டும். படைப்புகளை ஈ-கலப்பை (eKalappai - TSCu_Paranar) என்னும் மென்பொருள் உதவியுடன் தட்டச்சு செய்து, அனுப்பவேண்டுகிறோம்.

இம்மலரில் வெளியிடப்பட்டுள்ள தகவல்கள், படைப்பாளர்களால் அனுப்பப்பட்டவை. அல்லது பல்வேறு நூல்களிலிருந்து தொகுக்கப் பட்டவை. அதனால் தகவல்களில் உள்ள நிறை, குறைகளுக்கு மலர்க்குழு பொறுப்பேற்க இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

- மலர் குழு

## அடுத்த மலரில்.................

### (1) இந்து சமய தத்துவங்களில் கடவுள்.......

### (2) பிரதோஷ மகிமை.....